**தேசிய இரத்தினக்கல், ஆபரண அதிகாரசபை - 2021**

---

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

தேசிய இரத்தினக்கல், ஆபரண அதிகாரசபையின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று, நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்கள் மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தினதும், 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளினதும் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான அதிகாரசபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, அதிகாரசபை தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது அதிகாரசபை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை

எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

அதிகாரசபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் அதிகாரசபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதிகாரசபை அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி ஆணைக்குழுவின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு கல்லூரிக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் ஆணைக்குழுவின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாகவும் அவசியமானதாகவும் கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- அதிகாரசபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- அதிகாரசபை ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கல்லூரி இணங்கியிருந்ததா என்பதும்,

- அதிகாரசபையின் அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- அதிகாரசபையின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்களின் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 இலங்கை கணக்கீட்டு நியமங்களுடனான இணக்கமின்மைகள்

| | உரிய நியமங்களுக்கான தொடர்புகளுடன் இணக்கமின்மைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இலங்கை கணக்கீட்டு நியமம் 7 இன் பிரகாரம் முதலீட்டு செயற்பாடுகளின் கீழ் சீராக்கப்பட வேண்டிய ரூபா 104,374,754 தொகை நடைமுறை வேலைகளில் அதிகரிப்பாக சீராக்கம் செய்யப்பட்டிருக்கவில்லை. | நடைமுறை வேலைகளின் பெறுமதி இரத்தினபுரி கட்டிடத்திற்கான ரூபா 7,979,039 தொகை மூலதனமாக்கப்பட்டு குறிப்பு 03 நடைமுறையல்லா சொத்துககளின் கீழ் காண்பிக்கப்பட்டுள்ளது. மீதி செலுத்த வேண்டிய மீதியில் சீராக்கி காண்பிக்கப்பட்டுள்ளது. | கணக்கீட்டு நியமங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | இலங்கை கணக்கீட்டு நியமம் 16 இன் 51 ஆம் பந்தியின் பிரகாரம் நடைமுறையல்லா சொத்துக்களின் பயன்தரு ஆயுட்காலம் வருடாந்தம் மீளாய்வு செய்யப்படாமையின் காரணமாக முழுமையாக பெறுமானத்தேய்வு செய்யப்பட்டிருந்த போதும் தற்போதும் பயன்படுத்தப்படுகின்ற கிரயம் ரூபா 202,027,608 ஆன சொத்துக்களின் பயன்தரு ஆயுட்காலம் தொடர்பாக மதிப்பீடு செய்யப்பட்ட வழுக்கள் இலங்கை கணக்கீட்டு நியமம் 08 இன் பிரகாரம் மீள்திருத்தம் செய்து சரியான இழிவுப் பெறுமதியை நிதிக்கூற்றுக்களில் காண்பிப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | சகல மோட்டார் வாகனங்களும் மீள்மதிப்பீட்டு நிறைவடைந்தவுடன் கணக்கு புத்தகங்களில் உள்ளடக்கப்படும். ஏனைய சொத்துக்களின் மதிப்பீடு ஒவ்வொரு தொகுதிக்கும் உரிய சொத்துக்கள் தனித்தனியாக மேற்கொள்ள வேண்டியிருந்தது. முகாமைத்துவத்தின் தீர்மானத்தின் பிரகாரம் எதிர்காலத்தில் கணக்குகளில் உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுது. | - மேற்படி - |
| (இ) | இலங்கை கணக்கீட்டு நியமம் 36 இன் ஏற்பாடுகளுக்கு முரணாக | அதிகார சபையினால் நீண்டகால வாடகையின் அடிப்படையில் நாவுல | - மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| | மீளாய்வாண்டின் இறுதியில் காணப்பட்ட ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் இழிவுப் பெறுமதியில் இழப்பீட்டிற்கான நிதி ஏற்பாடாக ரூபா 3,907,223 குறைக்கப்பட்டிருந்தது. | கட்டிடம் மற்றும் பெலிதெனிய கட்டிடத்திற்காக 2012 ஆம் ஆண்டு முதல் இழப்பீட்டு ஏற்பாடு ஒதுக்கப்பட்டுள்ளது. அதன் பின்னர் 2021 ஆம் ஆண்டில் இழப்பிற்கு உட்பட்ட தங்க அளவினை நிர்ணயிக்கும் பிரிவிற்கு சொந்தமான 02 உபகரணங்களுக்காக இழப்பீட்டு ஏற்பாடு ஒதுக்கப்பட்டுள்ளது. | |
| (ஈ) | அதிகார சபையால் அரசாங்க வங்கியொன்றில் வைப்புச் செய்யப்பட்ட ரூபா 371,842,648 தொகையான கண்காட்சியில் வைக்கக்கூடிய 03 இரத்தினக்கற்கள் 2020 ஆம் ஆண்டில் ரூபா 765,316,000 தொகையில் மீள்மதிப்பீடு செய்யப்பட்டிருந்ததுடன் மீள்மதிப்பீட்டு பெறுமதி இலங்கை கணக்கீட்டு நியமம் 16 இன் பிரகாரம் புத்தகங்களில் சீராக்கப்படாமல் கணக்குகளில் குறிப்பாக மாத்திரம் காண்பிக்கப்பட்டிருந்தது. | அதன் பெறுமதியான ரூபா 765,316,000 பெறுமதி எதிர்வரும் ஆண்டில் கணக்குகளில் காண்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | - மேற்படி - |
| (உ) | மீளாய்வாண்டின் இறுதியில் 06 வழக்குகளுக்காக செலுத்த வேண்டியது என எதிர்பார்க்கப்பட்ட இழப்பீட்டு பணத்தின் பெறுமதி ரூபா 6,733,600 இலங்கை கணக்கீட்டு நியமம் 37 இன் பிரகாரம் நிகழத்தக்க பொறுப்பாக நிதிக்கூற்றுக்களில் குறிப்புக்களின் மூலம் காண்பிக்கப்பட்டிருக்க வில்லை. | கணக்குகள் மேற்கொள்ளப்பட்ட திகதி வரையிலும் அது தொடர்பாக உள்ளபடியான பொறுப்பாக இல்லாதிருந்தமையால் 2022 ஆம் ஆண்டின் போது மீளாய்வு செய்து கணக்குகளில் காண்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | - மேற்படி - |

### 1.5.2 கணக்கீட்டுக் கொள்கைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| அதிகார சபையின் கணக்கீட்டு கொள்கையின் பிரகாரம் சொத்துக்களுக்குரிய இழப்பீட்டு நட்டத்தை இனங்காணும் போது அந்த சொத்துக்கள் மீளாய்வு செய்யப்பட்டு அதற்குரிய ஒதுக்கப்பட வேண்டிய இழப்பீட்டு நட்ட பெறுமதி வருடாந்தம் மதிப்பீடு செய்யப்பட வேண்டியிருந்த போதும், அவ்வாறு மேற்கொள்ளாமல் ஏனைய சொத்துக்கள், பெற வேண்டியவைகள் மற்றும் வைப்புக்கள், முற்பணங்களுக்காக ரூபா முறையே ரூபா 200,000 தொகை, ரூபா 1,407,972 மற்றும் ரூபா 1,433,947 ஆன ஒரே பெறுமதி 2018 ஆம் ஆண்டு முதல் 2021 ஆம் ஆண்டு வரை இழப்பீட்டு நட்டமாக கணக்குகளில் சீராக்கப்பட்டிருந்தது. | அதிகாரசபையின் நடைமுறைச் சொத்துக்களுக்குரியதாக மேற்கொள்ளப்பட்ட இழப்பீட்டு நட்டங்களில் உள்ளடக்கப்பட்ட ரூபா 200,000 தொகை Gem and gem Institiue இல் முதலீடு செய்யப்பட்டுள்ளது. தற்போது இந்த நிறுவனம் செயற்படாதிருந்ததுடன் அதற்குரிய தகவல்களை கண்டறிய முடியாதுள்ளது. ஏனைய சொத்துக்கள் மற்றும் பெற வேண்டிய வைப்புக்களுக்கான ரூபா 1,407,972 மற்றும் ரூபா 1,433,947 இற்குரிய இழப்பீட்டு நட்டம் மீளாய்வு செய்து எதிர்காலத்தில் கணக்குகளிலிருந்து பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | அதிகார சபையின் கணக்கீட்டு கொள்கைகளுக்கு இணங்க செயற்பட வேண்டும். |

## 1.6 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

### 1.6.1 பெறவேண்டிய பணம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| உலக சந்தை நிலையத்தில் தாபிக்கப்பட்டுள்ள இலங்கை இரத்தினக்கல் ஆபரண மற்றும் பரிமாற்றல் நிலையத்திற்காக தனியார் கம்பனியொன்றுடன் ஏற்படுத்திக் கொள்ளப்பட்ட வாடகை உடன்படிக்கை 2021 ஒக்தோபர் 31 ஆந் திகதியில் முடிவடைந்திருந்ததுடன் பாதுகாப்பு பிணை வைப்பு ரூபா 16,368,300 தொகை 2022 ஏப்ரல் 30 கணக்காய்வுத் திகதி வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை. | பாதுகாப்பு பிணை வைப்பு ரூபா 16,368,300 தொகையை விடுவித்துக்கொள்வதாயின் சகல கடைகளினதும் தீர்த்தல் உரித்து இந்த நிறுவனத்திற்கு வழங்கப்பட வேண்டியிருந்தது. எனினும் கடை இலக்கம் 30, 36 மற்றும் 47 என்ற கடைகளுக்குரிய கடை உரிமையாளர்களினால் அதிகாரசபைக்கு 2021 ஒக்தோபர் 31 ஆந் திகதி வரையிலும் கையளிக்கப்படாதிருந்ததுடன் இலக்கம் 33 மற்றும் 37 கடைகளுக்காக மீள் | பாதுகாப்பு பிணை வைப்பை விரைவாக அறவிடுவதற்கு முறையான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| | நினைவூட்டலும் வழங்கப்பட்டுள்ள போதும் நிலுவை வாடகை செலுத்தப்பட்டிருக்கவில்லை. அதன் பிரகாரம் தனியார் கம்பனி முன்னின்று நடவடிக்கை எடுத்திருந்ததுடன் அந்தக் கம்பனிக்கு காணப்படுகின்ற இருப்புத் தொகுதி கையளிக்கப்பட்டுள்ளது. வழக்கொன்று காணப்படுகின்றமையால் எந்தவொரு முறையிலும் கைப்பற்றல் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | |

**1.6.2 செலுத்த வேண்டிய பணம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) தேசிய இரத்தினக்கல், ஆபரண ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவகத்தின் கணக்குகளின் பிரகாரம் அதிகாரசபையிலிருந்து கிடைக்க வேண்டிய மீதி ரூபா 3,577,395 ஆக காண்பிக்கப்பட்ட போதிலும் அதிகார சபையின் நிதிக்கூற்றுக்களில் அந்த மீதி உள்ளடக்கப்பட்டிருக்க வில்லை. | நிறுவனத்திலிருந்து அதிகார சபைக்கு இரத்தினக்கல் வெட்டும் பாடநெறிக்காக செலுத்த வேண்டிய ரூபா 884,500 தொகைக்காக உறுதிப்படுத்தப்பட்ட செலவினம் ஆபரண அபிவிருத்தி நிதியத்திலிருந்து செலுத்தப்பட்டுள்ளது. உரிய பாடநெறி தொடர்பாக ஏற்படுத்தப்பட்ட உடன்படிக்கை நிபந்தனையின் பிரகாரம் மேற்கொள்ள முடியுமான கொடுப்பனவுகள் மாத்திரம் அதிகாரசபையால் செலுத்தப்பட்டுள்ளது. | இரு தரப்பினருக்கும் இடையே இணக்கப்பாட்டிற்கு வந்து மீதியை தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) 05 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் முதல் கொண்டு வரப்படுகின்ற செலுத்த வேண்டிய ரூபா 37,114,917 மீதியொன்று 2022 மே 31 ஆந் திகதி வரையிலும் தீர்த்து வைப்பதற்கு தவறியிருந்தது. | தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | விரைவாக தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) 1993 இன் 50 ஆம் இலக்க தேசிய இரத்தினக்கல், ஆபரண அதிகாரசபை சட்டம் | | | |
| (i) 15(1) ஆம் பிரிவு | இலங்கையில் இரத்தினக்கல் கைத்தொழிலை நடாத்திச் செல்வதற்கான அனுமதிப்பத்திரம் விநியோகித்தல் தொடர்பாக பொறுப்பு வாய்ந்த ஒரேயொரு அதிகாரத்தரப்பினர் தேசிய இரத்தினக்கல், ஆபரண அதிகார சபையாக இருந்தமையால் இரத்தினக்கல் கைத்தொழில் விடயத்திற்குரிய பிரதான ஒழுங்குபடுத்தும் அதிகாரசபை மூன்றாந் தரப்பினருடன் நேரடியாக இரத்தினக்கல் கையாளல் செயற்திட்டங்களில் ஈடுபடும் சட்டத்தின் 15(i) ஆம் பிரிவிற்கு முரணாக இருந்தமை சட்டமா அதிபர் திணைக்களத்தால் அறிவிக்கப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டில் அவ்வாறான 04 இரத்தினக்கல் கையாளல் | 2019 யூன் 04 ஆந் திகதிய E/17/19NG&JA கடிதத்தின் மூலம் சட்டமா அதிபர் திணைக்களத்தால் வழங்கப்பட்ட பரிந்துரையின் பிரகாரம் அதிகாரசபை நேரடியாக இரத்தினக்கல் கையாளல் செயற்திட்டங்களில் ஈடுபடாதிருந்ததுடன் இரண்டாம் தரப்பினருக்கு இரத்தினக்கல் கையாளல்களுக்கான அனுமதிப்பத்திரம் விநியோகிப்பதற்கு நடவடிக்கை எடுத்திருந்தது. அதன் போது அதிகார சபையினால் இரண்டாம் மற்றும் மூன்றாம் தரப்பினருடன் உரிய செயற்திட்டத்தை சரியான பிரகாரம் மேற்பார்வை செய்தல் மற்றும் அந்த செயற்திட்டங்களில் காணப்படுகின்ற இரத்தினக்கல் அதிகாரசபையின் பொறுப்பில் எடுப்பதற்கும், அந்த இரத்தினக்கற்களை விற்பனை செய்வதால் கிடைக்கின்ற வருமானத்தில் அரச இறைக்காக நிறுத்தி வைத்து மிகுதி பணம் | சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | செயற்திட்டங்கள் அமுல்படுத்தப் பட்டிருந்தன. | தொடர்புடைய அனுமதிப்பத்திர தாரர்களுக்கு விடுவித்தல் தொடர்பாக உடன்படிக்கை ஏற்படுத்தப்பட்டிருந்தது என்பதை சுட்டிக் காண்பிக்கின்றோம். | |
| (ii) | 15(2) ஆம் பிரிவு | இரத்தினக்கல் பரிசோதனை செய்தல் மற்றும் சான்றிதழ் விநியோகித்தல் களுக்காக நடாத்திச் செல்லப்படுகின்ற தனியார் ஆய்வுகூடங்களை பதிவு செய்வதற்கும் ஒழுங்குபடுத்து வதற்குமான திட்ட முறைமையொன்று தயாரிக்கப்பட்டிருக்க வில்லை. | ஆய்வுகூடங்களை தரமிடல் தொடர்பாக கவனத்தில் கொள்வதற்கு பணிப்பாளர் சபை நடவடிக்கை எடுத்துள்ளதுடன் அதன் பிரகாரம் பணிப்பாளர் சபை வழங்குகின்ற ஆலோசனையின் அடிப்படையில் மீண்டும் சபை பத்திரம் தயாரிக்கப்பட்டுள்ளதுடன் அதனை அடுத்துவரும் பணிப்பாளர் சபை கூட்டத்தில் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | - மேற்படி - |
| (iii) | 17(1) ஆம் பிரிவு | எந்தவொரு நபரினாலும் எந்தவொரு இடத்திலும் ஆபரண கைத்தொழிலை நடாத்திச் செல்வதற்கு அதிகாரசபைக்கு அந்த கைத்தொழில்களை நடாத்திச் செல்கின்ற இடங்களை பதிவு செய்திருந்தால் அன்றி முடியாதிருந்த போதிலும் அதிகார சபையினால் இது தொடர்பாக சரியான ஒழுங்குபடுத்தல் மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை. | 2021 ஆம் ஆண்டு முதல் அமுல்படுகின்ற பிரகாரம் ஆபணர துறை தொடர்பாக நடவடிக்கை எடுப்பதற்காக தனிப்பட்ட பிரிவொன்று தாபிக்கப்பட்டிருந்ததுடன் அந்தப் பிரிவின் மூலம் 2021 ஆம் ஆண்டில் கொரோனா நிலைமையின் கீழாக இருந்த போதிலும் மேல் மாகாணம் மற்றும் ஏனைய வரையறுக்கப்பட்ட மாகாணங்கள் சிலவற்றில் ஆபரண விற்பனைச் சாலைகள் மற்றும் ஆபரண விற்பனைச் சாலைகளை கேந்திரமாக கொண்டு பதிவு செய்யும் | வருடாந்தம் பதிவு செய்தல் தொடர்பாக கட்டளை தயாரித்து சரியான ஒழுங்கு படுத்தல் முறையொன்று மேற்கொள்ளப் படல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | நடவடிக்கைகள் மற்றும் அனுமதிப்பத்திரம் விநியோகித்தல் மூலம் (2021 மார்ச் முதல் திசெம்பர் வரை) ரூபா 1,534,104 சேகரிக்கப்பட்டிருந்தது. | |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை | | | |
| (i) | நிதிப்பிரமாணம் 486 | காசோலை மதிப்பிழக்கும் போது அதற்கான பெறுமதி கூடிய விரைவில் பணமாக அறவிட வேண்டியிருந்த போதிலும் 09 வருடங்களை விஞ்சிய மதிப்பிழந்த ரூபா 178,840 தொகையான 02 காசோலைகளுக்காக பணம் அறவிடப்பட்டிருக்க வில்லை. | 09 வருடங்கள் பழமையான ரூபா 178,840 தொகைக்காக மதிப்பிழந்த காசோலை தொடர்பான சட்டரீதியான நடவடிக்கைகளை எடுப்பதற்கு போதியளவான தகவல்கள் காணப்படவில்லை. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ii) | நிதிப்பிரமாணம் 756 | மீளாய்வாண்டில் நடைமுறையல்லா சொத்துக்கள் தொடர்பான பௌதீக மெய்மையாய்வு 2022 பெப்ரவரி 22 ஆந் திகதி வரையிலும் மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை. | காணப்படுகின்ற எரிபொருள் சிக்கலினால் நாவுல, மொனராகலை, மாத்தறை அலுவலகங்களில் மெய்மையாய்வு நடவடிக்கைகள் இதுவரை மேற்கொள்வதற்கு முடியாதிருந்ததுடன் எதிர்காலத்தில் பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | - மேற்படி - |
| (இ) | 2012 சனவரி 05 ஆந் திகதிய 01/2012 ஆம் இலக்க அரச நிதிச் | நிர்மாண வேலை ஒப்பந்தங்கள் மாத்திரம் சமுர்த்தி சமூக அடிப்படையிலான | உரிய இரண்டு பிரிவுகளிலும் குறைந்த வருமானம் பெறுகின்ற சகல சமுர்த்தி நலனாளிகளையும் | சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் |

| | | | |
|---|---|---|---|
| சுற்றறிக்கை | அமைப்புக்கள் / சமுர்த்தி பிரதேச அபிவிருத்தி அமைப்புக்களுக்கு கையளிக்க முடியுமாக இருந்த போதிலும் இரத்தினக்கல் செயற்திட்டத்தை மேற்கொள்வதற்கு அந்த சங்கங்களுக்கு அதிகாரம் கையளிக்கப்பட்டிருக்க வில்லை. எனினும் அதிகாரசபையால் 04 இரத்தினக்கல் செயற்திட்ட நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு சமுர்த்தி சமூக அடிப்படை அமைப்புக்களுடன் உடன்படிக்கைகளில் கைச்சாத்திட்டு அந்த நடவடிக்கைகள் மேற்கொள்வதற்கு அதிகாரம் கையளிக்கப் பட்டுள்ளது. | பிரதிநிதித்துவப் படுத்துகின்ற உத்தியோகபூர்வ சங்கமாக சமுர்த்தி சமூக அடிப்படை அமைப்பு உள்ளது. அதன் பிரகாரம் முன்னர் அமுல்படுத்தப்பட்ட குறைந்த வருமானம் பெறும் செயற்திட்டங்களின் பிரகாரம் இந்த செயற்திட்டத்தின் போதும் உரிய பிரதேச செயலாளர்களினால் உறுதிப்படுத்தப்பட்ட ஆற்றின் இரு பக்கத்திலுமுள்ள 07 உத்தியோகபூர்வ சமுர்த்தி சமூக அடிப்படையான அமைப்புக்களுக்கு இதன் போது அனுமதிப்பத்திர தரப்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. | வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 204,372,389 இலாபமாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான இலாபம் ரூபா 25,577,610 ஆகும். அதற்கிணங்க நிதி விளைவுகளில் ரூபா 178,794,779 தொகையான அதிகரிப்பொன்று அவதானிக்கப்பட்டது. இந்த அதிகரிப்பிற்கு செயற்திட்ட வருமானம் ரூபா 123,475,200 இனால் உயர்வடைந்து சென்றமை பிரதான காரணமாக இருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மை

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டில் சீனாவில் நடைபெற்ற சர்வதேச எக்ஸ்போ கண்காட்சி விற்பனை கொட்டகை தயாரிப்பதற்காக ரூபா | இந்த கண்காட்சி ஒழுங்கமைக்கும் போது தேசிய இரத்தினக்கல், ஆபரண அதிகாரசபையின் விருப்பமாக | சரியான கவனம் மற்றும் அவதானத்துடன் செயற்திறனாகவும் வினைத் |

| | | | |
|---|---|---|---|
| | 7,234,920 தொகை மற்றும் காட்சிப்படுத்துபவர்களை தெரிவு செய்வதற்காக பத்திரிகை அறிவித்தல் பிரசுரிப்பதற்காக ரூபா 41,553 தொகை செலவிடப்பட்டிருந்ததுடன் இந்தக் கண்காட்சியை பிரதிநிதித்துவப்படுத்துவதற்கு இலங்கைக்கு முடியாதிருந்தமையின் காரணமாக செலவிடப்பட்ட மொத்த செலவினமான ரூபா 7,276,473 தொகையும் பயனற்ற செலவினமாக இருந்தது. | இலங்கையர்களின் தொழில் முயற்சிகளுக்கு வசதிகள் வழங்குவதன் மூலம் இலங்கையின் இரத்தினக்கற்களுக்காக சீனாவில் காணப்படுகின்ற கேள்வியை மேலும் அதிகரித்தல் மற்றும் அதன்மூலம் நாட்டிற்கு வரக்கூடிய அந்நிய செலாவணியை அதிகரித்தலுமாகும். ஆதன் பிரகாரம் இந்த கண்காட்சியில் அதிகாரசபை, லக்சல மற்றும் சீனாவில் பதிவு செய்த இலங்கையின் இரத்தினக்கல் தொழில்முயற்சியாளர் முன்னின்று கண்காட்சியை நடாத்தியமையின் காரணமாக அதிகாரசபையினால் மேற்கொள்ளப்பட்ட நிதிரீதியான பங்களிப்பு பயனற்ற செலவினமாக இல்லாதிருந்தமையும் தெரிவிக்கின்றோம். | திறனாகவும் செலவினங்கள் செய்யப்படல் வேண்டும். |
| (ஆ) | இரத்தினக்கல், ஆபரண ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் தாபித்து நிறுவனம் ரூபா 300.65 மில்லியன் செலவினை மேற்கொண்டு இரத்தினக்கல் படிவைக் கண்டறியும் செயற்திட்டத்தின் கீழ் படல்கும்புற பிரதேச செயலகப் பிரிவில் கும்புகன் ஓயாவை சார்ந்ததாக அதிக இரத்தினக்கல் கிடைக்கும் பிரதேசமாக இனங்கண்டு அவற்றை வரைபடம் இட்டு அதிகாரசபைக்கு அறிவிப்பதற்கும் நடவடிக்கை எடுத்திருந்தது. இந்த அறிக்கை வரைபடம் பரிசீலனை செய்யப்படாமல் கும்புக்கன் ஓயா நீர்த்தேக்கத்திற்கு உட்படுகின்ற காணியில் இரத்தினக்கல் உள்ளதாக என பரீட்சிப்பதற்கு பரிசோதனை இல்ல அகழ்வு | அந்த நிலத்தில் இரத்தினக்கல் காணப்படுகின்றதா என உறுதிப்படுத்துவதற்காக மேற்கொள்ளப்பட்டமைக்காக ஏற்படுகின்ற ஆராய்ச்சி இல்லங்களை வெட்டுவதற்காக இல்லாதிருந்தடன் அது நீர்த்தேக்க நிலத்தின் கீழ் பாதிப்பு ஏற்படாத வகையில் இரத்தினக்கல் வளங்களை அகற்றுவதற்கு முடியுமாக இருந்ததை உறுதிப்படுத்துவதற்காக மேற்கொள்ளப்படுகின்ற ஆராய்ச்சி இல்ல அகழ்வாக இருந்ததை தயவுடன் அறியத் தருகின்றோம். உரிய ஆராய்ச்சி அகழ்வு செயற்பாடுகள் பெறுகை முறைகளுக்கு இணங்க கூறுவிலை கோரி மேற்கூறப்பட்ட பிரகாரம் மேற்கொள்ளப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் தெரிவு | இரத்தினக்கல், ஆபரண ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் தாபித்ததன் நோக்கத்தை கவனத்தில் கொண்டு அந்த நிறுவனத்தால் நிறைவேற்ற முடியுமான பணிகள் அந்த நிறுவனத்தி னாலேயே நிறைவேற்றப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | செயற்பாடுகளை மேற்கொள்வதற்காக ரூபா 5,754,000 மதிப்பீடு தயாரிக்கப்பட்டு கம்பனிக்கு கையளிக்கப்பட்டு மீளாய்வாண்டில் ரூபா 750,000 முற்பணத் தொகை செலுத்தப்பட்டிருந்தது. | செய்த நிறுவனத்திற்குரிய பணிகளுக்காக முற்பணம் செலுத்தப்பட்டிருந்தது. | |
| (இ) | இரத்தினக்கல் ஏலமிடலின் மூலம் கிடைக்கப் பெற்ற வருமானத்தில் ரூபா 1,793,300 தொகை சமுர்த்தி சமூக அடிப்படையிலான 02 அமைப்புக்களின் கோரிக்கையின் அடிப்படையில் சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தின் கீழ் பதிவு செய்யப்படாத போலியான சங்கத்திற்கு செலுத்தப்பட்டிருந்ததுடன் மேலும் ரூபா 12,507,556 சமுர்த்தி சங்கங்களின் பெயரில் காசோலைகள் அனுப்புவதற்கு பதிலாக சமுர்த்தி சங்கங்களின் 04 உத்தியோகத்தர்களின் தனிப்பட்ட 02 இணைந்த கணக்குகளுக்கு அனுப்புவதற்கு அதிகார சபை நடவடிக்கை எடுத்திருந்தது. | உடன்படிக்கை செய்யப்பட்ட சமூக அடிப்படையிலான சங்கங்களுக்கு எழுத்துமூல கோரிக்கையின் பிரகாரம் அவர்களினால் பெயர் குறிப்பிடப்பட்ட சங்கங்களின் அங்கத்தவர்களின் ஒன்றிணைந்த கணக்குகளுக்குரியதாக காசோலைகள் விநியோகிக்கப்பட்டிருந்த துடன் எனினும் குறைந்த வருமானம் பெறும் சமுர்த்தி நலனாளிகளுக்கு கட்டாயமாக செலுத்துவதற்கு உடன்படிக்கை செய்யப்பட்டிருந்த நலன் பங்கு 10 வீதம் அவர்களுக்கு கிடைக்கின்ற பிரகாரம் உரிய பிரதேச செயலாளர்களுக்கு காசோலை மூலம் விநியோகித்தல் கட்டாயமாக மேற்கொள்ளப்பட்டிருந்தது. சமுர்த்தி சங்கங்களின் 04 உத்தியோகத்தர்களின் பெயரில் தரப்பினராக உடன்படிக்கை செய்த அமைப்புக்களின் இணக்கப்பாட்டுடன் வெளிப்படுத்தல் கூற்றொன்று பெறப்பட்டு தலைவரின் அங்கீகாரத்துடன் காசோலை வழங்கப்பட்டிருந்தது. சமுர்த்தி சங்கங்களாக உடன்படிக்கையில் கைச்சாத்திடும் சந்தர்ப்பத்தின் போது உரிய உடன்படிக்கையில் காசோலை விநியோகிக்கின்ற உத்தியோகத்தரும் சாட்சியாளராக கையொப்பமிட்டிருந்ததுடன் | அரசாங்கத்தின் பணம் சரியான அதிகாரபலமின்றி தனிநபர்களின் தனிப்பட்ட கணக்குகளுக்கு அனுப்ப முடியாதிருத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | சமுர்த்தி சங்கம் இரண்டின் உத்தியோகத்தர்கள் சபையினால் அதிகாரம் கையளித்தல் கடிதமும் விநியோகிக்கப்பட்டிருந்தது. | |
| (ஈ) | இயந்திர இல்ல அகழ்விற்காக அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டுள்ள கோவை இலக்கம் CB 2600 A என்ற அனுமதிப்பத்திரதாரர் 2020 மார்ச் 02 ஆந் திகதிய இலக்கம் 2165/2 ஆம் இலக்க கட்டணம் அறவிடும் வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் பல்வேறு பணிகளுக்காக ரூபா 1,635,000 சேவைக் கட்டணம் அறவிட வேண்டியிருந்த போதிலும் ரூபா 48,000 சேவைக் கட்டணம் மாத்திரம் அறவிடப்பட்டிருந்தது. | இந்த கோவைக்குரிய 2021/2022 இன் வருடாந்த இயந்திர இல்ல அகழ்வு அனுமதியினை நீடிப்பதற்காக அனுமதிப்பத்திரதாரரினால் 2021 செப்தெம்பர் 22 ஆந் திகதி எழுத்துமூல கோரிக்கை விடுக்கப்பட்டிருந்தது. அந்த கோரிக்கையின் பிரகாரம் தற்போது அமுல்படுகின்ற திட்டமுறைமையின் பிரகாரம் நீடிக்கப்பட்டிருந்தது. கட்டணம் செலுத்தும் போது அனுமதிப்பத்திரதாரர்கள் ஏனைய சகல கட்டணங்களையும் செலுத்தியுள்ள போதும் தவறொன்றினால் அதிகரிக்கப்பட்ட 5000 சதுர அடிக்காக அறவிட வேண்டிய பிணைப் பணத்தை அறவிடுவதற்கு முகாமைத்துவ உதவியாளரால் முடியாதிருந்தது. அதனால் இந்த தவறிப்போன பணத்தை செலுத்துமாறு என்னாலும் அனுமதிப்பத்திரதாரருக்கு அறிவித்து கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. அந்தக் கட்டணத்தை செலுத்துவதற்கு தற்போது போதியளவான பணம் அவரிடம் இல்லாதிருந்தமையால் தற்போது உள்ள 10000 சதுரஅடி அளவினை மாத்திரம் வழங்குமாறு கோரிக்கை விடப்பட்டிருந்தது. அக்கோரிக்கையின் பிரகாரம் அனுமதிப்பத்திரதாரரினால் 10000 சதுரஅடியை விட கூடுதலாக அகழ்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தமை அமுல்படுத்தும் | வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் சரியாக சேவைக் கட்டணம் அறவிடப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | உத்தியோகத்தரினால் அவதானிக்கப்பட்டிருந்தது. அதனை அமுல்படுத்தும் உத்தியோகத்தரின் பரிந்துரையின் பிரகாரம் 2021 நவம்பர் 12 ஆந் திகதி என்னால் விநியோகிக்கப்பட்ட அகழ்வு அனுமதிப்பத்திரம் இரத்துச் செய்யப்பட்டு புதிய அனுமதிப்பத்திரம் விநியோகிக்கப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. அதிகரித்துக் கொள்வதற்கு நிர்ணயிக்கப்பட்ட 5000 சதுரஅடிக்காக செலுத்த வேண்டிய விசேட பிணைப்பணமான ரூபா 1,000,0000 தொகை, சாதாரண பிணைப்பணம் ரூபா 250,000 அதற்காக செலுத்த வேண்டிய வருடாந்த மேற்பார்வைக் கட்டணமான ரூபா 50,000 தொகை தவிர இயந்திர இல்ல அனுமதி வருடாந்தம் நீடித்துக் கொள்வதற்கு குறித்த சகல கட்டணங்களையும் அறவிடப்பட்டிருந்தமையை தயவுடன் அறியத் தருகின்றோம். | |
| (உ) | 1993 இன் 50 ஆம் இலக்க தேசிய இரத்தினக்கல், ஆபரண அதிகார சபை சட்டம் 1993 ஆம் ஆண்டில் அங்கீகரிக்கப்பட்ட பின்னர் அதில் காலரீதியில் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு மீளாய்வாண்டின் போதும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | சட்ட திருத்தங்கள் தொடர்பாக கலந்துரையாடி நான்கு தடவைகள் இரத்தினக்கல் மற்றும் ஆபரண கைத்தொழிலாளர்களுடன் 2021 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்டிருந்ததுடன் அவர்களின் முன்மொழிவுகள் மற்றும் கருத்துரைகள் தொடர்பாக விடயப் பொறுப்பு அமைச்சின் செயலாளருடனும், அதிகார சபையின் உள்ளக கணக்காய்வு உத்தியோகத்தருடனும் கலந்துரையாடல் மூன்று தடவைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் இறுதியாக பெறப்பட்ட | காலரீதியில் சட்டத்தில் திருத்தங்களை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| | முன்மொழிவுகளுடன் உத்தேசிக்கப்பட்ட சட்டத்தின் திருத்தம் மற்றும் ஆபரண கைத்தொழிலாளர்களின் சங்கங்களின் கோரிக்கையின் அடிப்படையில் அந்த சங்கங்களுக்கும் அனுப்புவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. | |

### 3.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) இரத்தினக்கல் மற்றும் ஆபரண சந்தை, சுற்றுலா கைத்தொழிலின் கேந்திர நிலையங்கள் மற்றும் வியாபார சமூகத்தின் கோரிக்கையின் அடிப்படையில் 2016 ஆம் ஆண்டில் இரத்தினக்கல் பரிசோதனை செய்தல் மற்றும் தங்க அளவினை தீர்மானிப்பதற்காக காலி பிரதேசத்தில் இரத்தினக்கல் ஆய்வுகூடமொன்று தாபிக்கப்பட்டிருந்தது. மீளாய்வாண்டில் மீளாய்வாண்டில் அந்த ஆய்வுகூடம் 24 நாட்கள் மாத்திரம் திறக்கப்பட்டிருந்ததுடன் அந்தக் காலத்தில் ரூபா 175,600 வருமானம் பெறப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் 04 மாத காலத்தில் சேவை நடவடிக்கைகளுக்காக ரத்ன விஞ்ஞானிகள் நியமிக்கப்படாமையினால் அந்த காலத்தில் எந்தவொரு சேவையும் வழங்கப்பட்டிருக்கவில்லை. | 2021 ஆம் ஆண்டில் காலி இரசாயன ஆய்வுகூடம் 24 நாட்கள் மாத்திரம் திறக்கப்பட்டதுடன் அந்தக் காலத்தில் ரூபா 175,600 வருமானம் பெறப்பட்டிருந்தது. மிக விரைவாக பரவிய Covid 19 தொற்றுநோயின் காரணமாக தொற்றுநோய் நிலைமையினை சமாளிக்கும் வரையிலும் காலி ஆய்வுகூடத்தின் நடவடிக்கைகள் வாரத்தின் ஒரு தடவை மாத்திரம் மேற்கொள்வதற்கும், அவ்வவ்போது நாடு மூடப்பட்டமை, உள்ளக மாகாணங்களுக்கிடையிலான போக்குவரத்து வசதிகள் தடைப்பட்டமையும் தங்க விஞ்ஞானிகள் சிலர் தனிப்படுத்தலுக்கு உட்பட்டமையும், காலி ஆய்வுகூடம் நீண்டகாலம் மூடப்படுவதற்கு காரணமாக இருந்ததை சுட்டிக் காட்டுகின்றோம். | அதிகாரசபையின் செயற்பாடுகள் செயற்திறனாகவும் வினைத்திறனாவும் மேற்கொள்ளப் படல் வேண்டும். |
| (ஆ) இரத்தினக்கல் அனுமதிப்பத்திரம் விநியோகிக்கும் போது கையேற்கப்படுகின்ற இரத்தினக்கல் இல்லங்களை | அதிகாரசபையினால் அனுமதிப்பத்திரம் வழங்கப்படுகின்ற இரத்தினக்கல் அனுமதிப்பத்திர நிபந்தனைகளின் பிரகாரம் | இரத்தினக்கல் இல்ல குழிகளை மூடி இல்ல நிலம் சரியானதாக மீளமைப்பு செய்யப் |

| | | |
|---|---|---|
| மீண்டும் நிரப்பி மீளமைத்தலுக்காக ரூபா 4,500 தொகை, ரூபா 9,000 மற்றும் இயந்திர இல்லத்திற்காக சதுரஅடி 3000-4000 வரையான அளவிற்காக ரூபா 600,000 முதல் ரூபா 5,000,000 ஆக விசேட பாதுகாப்பு பிணையொன்று இல்லத்தாரர்களிடமிருந்து அறவிடப்பட்டிருந்தது. இரத்தினக்கல் இல்ல குழிகளை மூடி உரிய நிலம் மீளமைக்கப்பட்டிருந்ததா என்பது தொடர்பாக சரியான ஒழுங்குபடுத்தல் மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. மீளாய்வாண்டில் ரூபா 8,980,350 தொகை இல்ல அகழ்வாளர்களினால் மீண்டும் வழங்கப்படாதிருந்ததுடன் நிலத்தை மீளமைப்பதற்காக அதிகாரசபை ரூபா 3,099,933 தொகையை மாத்திரம் செலவிட்டிருந்தது. | இல்ல அனுமதிப்பத்திரம் முடிவடைந்து 02 மாத காலத்தில் உரிய இல்லங்களை மூடி பிணைப் பணம் கோரப்படுவதுடன் அவ்வாறு இல்லாதபோது உரிய பிணைப்பணத்தை அரசுடமையாக்குவதற்கு மேற்கொள்ளப்படுகின்ற மையால் அதிகார சபையின் வருமானத்தில் சேர்க்கப்படுகின்றது. பிணைப் பணத்தை அரசுடமையாக்காதிருந்த இல்லங்களை மூடுதல் அதிகாரசபையினால் மேற்கொள்ளப்படுகின்றது. | பட்டிருந்ததா என்பது தொடர்பாக சரியான ஒழுங்குபடுத்தல் மேற்கொள்ளப்படல் வேண்டும். |

(இ) அதிகார சபைக்கு சொந்தமான இரத்தினக்கல் கையாளல் செயற்திட்டங்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வு பரிசோதனையின் போது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

| | | |
|---|---|---|
| (i) வட்டவல மவுன்ஜீன் இரத்தினக்கல் கையாளல் செயற்திட்டத்திற்காக நீர்ப்பாசன திணைக்களத்திலிருந்து பெறப்பட வேண்டிய அங்கீகாரம் பெறப்படாமை, காணி ஏல விற்பனையிலிருந்து 40 சதவீதம் பெற்றுக் கொள்ளும் அடிப்படையில் மகாவலி அதிகார சபை | இரத்தினக்கல் வளங்கள் அதிகமாக காணப்படுகின்ற இடங்களில் இந்த அனுமதியற்ற இரத்தினக்கல் கையாளலால் பிரச்சினைகள் ஏற்பட்டிருந்ததுடன் இரத்தினக்கல் செறிந்துள்ள இடங்களுக்காக நீர்ப்பாசனத் திணைக்களத்தின் பரிந்துரையின் பிரகாரம் ஒரு கிலோமீற்றர் தூரத்தில் அல்லது வேறொரு | சட்டத்தின் பிரகாரம் அதிகார சபையின் மூன்றாந் தரப்பினருடன் நேரடியாக இரத்தினக்கல் அகழ்வு செயற்திட்டங்களில் ஈடுபட முடியாதிருந்த போதிலும் ஆரம்பிக்கப் |

இந்த செயற்திட்டத்திற்காக இணக்கப்பாடு வழங்கியிருந்த போதிலும் ஏலவிற்பனையின்றி சமுர்த்தி சமூக அடிப்படை அமைப்புக்களுடன் அதிகாரசபை இரத்தினக்கல் கையாளல் செயற்திட்டத்தை அமுல்படுத்துதல், செயற்திட்டத்தை முறையாக ஆரம்பிக்காமையின் காரணமாக சில அரச நிறுவனங்கள் இலாப பங்கு கோருதல், ஏலமிடும் நடவடிக்கைகள் மேற்கொள்ளாமையில் அதிகாரசபைக்கு ஒரே தடவையில் பெறக்கூடியதாகவிருந்த கணிசமான வருமானம் உரித்தற்று போன குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன. அவ்வாறே சுற்றாடல் பாதிப்பு ஏற்படாத வகையில் பல நிபந்தனைகளின் கீழ் அகழ்வினைச் செய்வதற்கு மத்திய சுற்றாடல் அதிகார சபையின் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்ததுடன் அவற்றில் மணல் மூட்டைகள் இட்டு ஒரு பக்கத்தால் நீர்வழிந்தோடிச் சென்றிருந்தமை, அவற்றின் உள்ளே தோண்டப்பட்ட இல்லங்களில் மண் குவிந்து காணப்பட்டமையை அகற்றுதல் கணிசமான மண் குவியல்கள் குவிந்திருந்தமை மற்றும் இரத்தினக்கல் கழுவும் இயந்திரம் ஆற்றிற்கு அருகில் பொருத்தப்பட்டமை என்பன பௌதீக கணக்காய்வு பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது. இடமொன்றில் அகழ்வுகள் தீர்மானிக்கப்படுகின்றது. இந்த இடங்களில் மேற்கொள்ளப்பட்ட அனுமதியற்ற இரத்தினக்கல் தோன்றலின் காரணமாக இந்த இடங்களில் அமைந்துள்ள பாலத்தில் நிலையான தன்மைக்கு பாதிப்பு ஏற்படும் நிலைமை காணப்பட்டது. அனுமதியற்ற இரத்தினக்கல் அகழ்வு மேற்கொள்ளப்பட்டமையின் காரணமாக வெள்ளப்பெருக்கு மற்றும் சுற்றாடலுக்கு அதிகளவான இழப்பு ஏற்பட்டிருந்ததுடன் அதன் காரணமாக மத்திய சுற்றாடல் அதிகாரசபையினால் தேசிய இரத்தினக்கல், ஆபரண அதிகார சபையின் மேற்பார்வையின் கீழ் அந்த இரத்தினக்கல் வளங்களை அகற்றுவதற்காக அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. பட்டுள்ள இந்த செயற்திட்டங்களை சரியான அங்கீகாரத்துடன் குறைபாடுகளை மாற்றியமைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

| | | | |
|---|---|---|---|
| (ii) | களுகங்கை ஹெரனியாவக்க இரத்தினக்கல் கையாளல் செயற்திட்டத்திற்காக ரூபா 125,000,000 பெறுமதியில் வியாபாரி ஒருவரும் மற்றும் 02 சமுர்த்தி சங்கங்களும் தெரிவு செய்யப்பட்டிருந்ததுடன் இந்த செயற்திட்டத்தை மேற்பார்வை செய்வதற்காக இல்ல குழுக்கள் 02 வாரங்களுக்கு ஒரு தடவை செயற்திட்டத்தின் நிலத்திற்கு வருகை தந்து பரீட்சித்து மாதிரி பதிவேடொன்றை பூர்த்தி செய்து சமூகமளித்த உத்தியோகத்தர்கள் கையொப்பமிட்ட பின்னர் அது அதிகார சபைக்கு கையளிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் அவ்வாறு செய்யப்படாதிருந்ததுடன் செயற்திட்டத்தை சரியான பிரகாரம் மேற்பார்வை செய்யாதிருந்தமையும் அவதானிக்கப்பட்டது. | காணப்பட்ட கொரோனா தொற்றுநோயின் நிலைமையின் காரணமாக செயற்திட்டத்தின் கடமைகளில் உத்தியோகத்தர்கள் மற்றும் ஏனைய குழுக்கள் அவ்வவ்போது நோய்க்கு உட்பட்டிருந்ததுடன் அந்த தொற்றுநோய் நிலைமை மற்றும் அதிக மழை மற்றும் வெள்ளப்பெருக்கு நிலைமையின் காரணமாக 2021 இன் இறுதி அரைப் பகுதியில் அநேகமான காலம் செயற்திட்ட நடவடிக்கைகள் செயழிலந்திருந்தது. செயற்திட்டம் அநேகமான காலம் செயற்பாடின்றி காணப்பட்டதுடன் தற்போது செயற்படும் நிலையில் காணப்படுகின்ற செயற்திட்டங்களை மேற்பார்வை செய்வதற்காக கணக்காய்வு ஆலோசனையின் அடிப்படையில் மாதிரி பதிவேடொன்று தயாரித்து உரிய குழு உத்தியோகத்தர்களை கோருவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | - மேற்படி - |
| (iii) | புதையல் இரத்தினக்கல் கையாளல் செயற்திட்டத்திற்காக மத்திய சுற்றாடல் அதிகாரசபை, நீர்ப்பாசனத் திணைக்களம், தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனம் மற்றும் கிரியெல்ல மற்றும் அயகம பிரதேச செயலாளர்களிடமிருந்து அங்கீகாரம் கோரப்பட்டிருந்த போதிலும் அங்கீகாரம் கிடைத்திருக்கவில்லை. இந்த செயற்திட்டத்திற்காக முயற்சியுள்ள தரப்பினரை தொடர்புபடுத்திக் கொள்வதற்கு கூறுவிலை | அனுமதியற்ற இரத்தினக்கல் அகழ்வினை கட்டுப்படுத்துவதற்கு வசதியீனமற்ற இடங்களில் மேற்கொள்ளப்படுகின்ற அனுமதியற்ற இரத்தினக்கல் அகழ்வுகளை தடுத்து அதிகாரசபை முன்னின்று விரைவாக உரிய இரத்தினக்கல் இல்லத்தை அகற்றி செயற்திட்டத்தை அமுல்படுத்துவதற்கான அங்கீகாரம் கோரப்பட்ட போதிலும் அந்த அங்கீகாரம் வழங்குதல் தாமதமாகியிருந்தது. அதன் காரணமாக இந்த இடங்களில் அனுமதியற்ற அகழ்வுகளுக்கு | - மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| | கோரப்படாமையினால் பெறப்பட வேண்டியதாக காணப்பட்ட ஆகக்கூடிய கேள்வி தொகை இழக்கப்பட்டிருந்தது. இந்த இரத்தினக்கல் இல்ல கட்டிடத்திற்காக 07 சமுர்த்தி சமூக அடிப்படையிலான அமைப்புக்களுடன் உடன்படிக்கை செய்திருந்ததுடன் இரத்தினக்கல் விற்பனையால் கிடைக்கின்ற வருமானத்தில் 60 சதவீதம் அந்த சங்கங்களுக்கு வழங்குவதற்கும் இணங்கி இந்த சங்கங்களின் நிதி இயலுமையை கண்டறியாமல் செயற்திட்டத்தின் நடவடிக்கைகளுக்காக தொடர்புபடுத்தப்பட்டிருந்தது. | உட்பட்ட இரத்தினக்கல் இல்லங்களை உரித்தற்றதாக்குவதை தடுப்பதற்காக 2016 திசெம்பர் 06 ஆந் திகதி சனாதிபதி செயலாளரின் வழிகாட்டியை அடிப்படையாகக் கொண்டு இந்த செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்டிருந்தது. | |
| (iv) | களுகங்கை ஹெரனியாவக்க மற்றும் புதையல் இரத்தினக்கல் அகழ்வு செயற்திட்டங்களிலிருந்து முறையே பெறப்பட்ட 1289 இல்ல மூட்டைகள் பொதிகள் மற்றும் 1975 சாக்கு மூட்டைகள் செயற்திட்ட வளவில் வைக்கப்பட்டிருந்தது. | திசெம்பர் இறுதி அரைப்பகுதி மற்றும் 2022 சனவரி மாதம் ஒன்றுசேர்ந்த இல்லங்களின் களஞ்சிய அளவு கோரப்பட்ட அளவில் சேர்ந்ததன் பின்னர் பொக்கிசமான இரத்தினக்கல்லை பாதுகாப்பாக வங்கியில் வைப்புச் செய்யப்பட்டிருந்தது. உரிய இரத்தினக்கல் இல்ல இருப்புக்களை கழுவும் போது கண்டறியப்பட்ட இரத்தினக்கற்கள் 2022 பெப்ரவரி 24 ஆந் திகதி ரூபா 54,366,996.80 தொகையில் இரத்தினக்கல் ஏல விற்பனையும் மேற்கொள்ளப்பட்டிருந்தது. | - மேற்படி - |
| (ஈ) | மொனராகலை வடல்கும்புற கெடவில இரத்தினக்கல் அகழ்வு செயற்திட்டம் 13.5 பேர்ச் அளவான ஆற்றொன்றின் பகுதியில் இரத்தினக்கல் அகழ்வதற்காக ரூபா 5 மில்லியன் பெறுமதியில் | இரத்தினக்கல் அகழ்வு செயற்திட்ட செயற்பாடுகளை கட்டியெழுப்புதல், தொடர்ந்தும் எஞ்சிக் காணப்பட்ட அகழ்வுகளை மேற்கொள்ளாதிருந்த சிறிய நில அளவுகளை கைவிடுவதாயின் மீண்டும் | - மேற்படி - |

| | | |
|---|---|---|
| முயற்சியாளர் ஒருவரும், இன்னும் 2 சமுர்த்தி சங்கங்களும் தெரிவு செய்யப்பட்டிருந்தன. முயற்சியாளர் தரப்பினரால் அதில் 9.5 பேர்ச் அளவான காணி பிரதேசத்தில் அகழ்வுகள் மேற்கொண்டு மிகுதி 4 பேர்ச் அளவில் அகழ்வு நடவடிக்கைகளை நிறுத்துவதற்கு மீண்டும் அனுமதி கோரப்பட்டிருந்தது. சட்டமா அதிபர் திணைக்களத்தால் இரத்தினக்கல் செயற்திட்டத்தை மேற்கொள்வதற்கு சட்டத்தின் ஏற்பாடுகள் வழங்கப்படாதிருந்ததாக அறிவிக்கப்பட்டதன் அடிப்படையில் உரிய உடன்படிக்கை காலத்தை நீடிக்காமல் 02 சமுர்த்தி சங்கங்களை மீண்டும் தொடர்புபடுத்தி அந்த இடத்தில் இரண்டாவது கட்டத்தின் கீழ் அகழ்வதற்கு பணிப்பாளர் சபை தீர்மானித்ததன் அடிப்படையில் புதிய உடன்படிக்கையொன்று அதிகாரசபையினால் ஏற்படுத்தப்பட்டிருந்தது. | அனுமதியற்ற செயற்பாடுகள் விரிவடைவதை தடுக்க முடியாதிருந்த நிலைமை ஏற்பட்டிருந்தது. ஏலத்திற்காக பொருத்தமான பின்புலமொன்று காணப்படாமையினால் அரசாங்கத்திற்கு வருமானத்தை பெற்றுக் கொள்வதற்காக பிரயோக ரீதியிலான தீர்வொன்றாக அண்மித்த கிராம உத்தியோகத்தர் பிரிவுகள் இரண்டின் சமுர்த்தி சமூக நல அமைப்புக்கள் (பிரதேச செயலகத்தினால் உறுதிப்படுத்தி) அமைப்புக்களுடன் பணிப்பாளர் அங்கீகாரத்தின் அடிப்படையில் செயற்திட்ட உடன்படிக்கையில் கைச்சாத்திடுவதற்குரிய செயற்திட்டங்கள் செயற்படுத்தப்பட்டுள்ளது. | |

## 3.3 நிதியத்தின் குறைவான பயன்பாடு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) இரத்தினக்கல் மற்றும் ஆபரண கைத்தொழில் அபிவிருத்திக்காக ஆபரண கைத்தொழிலாளர்களிட மிருந்து ரூபா 5,000 வருடாந்த பதிவுக் கட்டணம் அறவிட்டு 2008 ஆம் ஆண்டில் ஆபரணங்கள் அபிவிருத்தி நிதியம் தாபிக்கப்பட்டிருந்ததுடன் கைத்தொழிலை அபிவிருத்தி செய்வதற்காக நிதியத்தை | ஆபரண கைத்தொழிலில் ஈடுபடுகின்ற நபர்கள் மற்றும் வியாபார நிலையங்களை பதிவு செய்வதன் மூலம் சேகரிக்கப்பட்ட பணம் விசேட நிதியத்தில் காணப்படுவதுடன் அந்தப் பணத்தை பயன்படுத்தி ஆபரணக் கைத்தொழிலில் ஈடுபடுகின்ற விற்பன்னர்களின் முயற்சியை சிறந்த முறையில் பயன்படுத்துவதற்கு சபை பத்திர இலக்கம் 2176 இன் | எதிர்பார்த்த நோக்கங்களை நிறைவேற்றும் வகையில் நிதியத்தை செயற்திறனாக பயன்படுத்துதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | பயன்படுத்துவதற்கு குறித்துரைத்த திட்டம் அல்லது முறைமையொன்று காணப்படாதிருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 82,536,818 தொகையான நிதியம் பயனற்று வைக்கப்பட்டிருந்தது. | கீழ் அங்கீகரிக்கப்பட்ட பிரகாரம் உரிய வடிவமைப்பு உபகரணங்கள் மற்றும் தளபாடங்களை பெற்றுக் கொள்வதற்காக பெறுகை செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன் அதற்காக 2022 ஏப்ரல் 22 ஆந் திகதி செய்திப் பத்திரிகை அறிவித்தலும் பிரசுரிக்கப்பட்டுள்ளது. | |
| (ஆ) | 1993 இன் 50 ஆம் இலக்க தேசிய இரத்தினக்கல், ஆபரண அதிகார சபை சட்டத்தின் 14(கீ) பிரிவின் பிரகாரம் ஆபரண கைத்தொழில் மற்றும் ஆபணர கைத்தொழில் வேலைகளை செய்கின்ற நபர்களின் வாழ்க்கை மற்றும் உயிர் மற்றும் உடலியல் விபத்துக்களிலிருந்து பாதுகாப்பதற்காக எடுக்கப்பட வேண்டிய பாதுகாப்பு முறைகள் முறைமைப்படுத்துதல் மற்றும் நிர்வகித்தல் நோக்கத்தில் இரத்தினக்கல் அகழ்வு அனுமதிப்பத்திரம் விநியோகிக்கும் போது ரூபா 500 வீதம் அறவிட்டு இரத்தினக்கல் அகழ்வு நலன்புரி நிதியத்தில் செலவு வைக்கப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் இறுதியில் இந்த நிதியத்தின் மீதி ரூபா 34,154,875 ஆக இருந்ததுடன் இந்த நிதியத்தின் மூலம் எதிர்பார்த்த நோக்கம் நிறைவேற்றப்பட்டிருக்க வில்லை. | இந்த நிதியம் குறைவாக பயன்படுத்தப்படுகின்றமையை தடுப்பதற்காக 2020 ஆம் ஆண்டின் போது இல்ல விபத்துக்கள் தொடர்பாக வழங்கப்பட்டுள்ள நலன்களை கவனத்தில் கொள்ளக்கூடிய மட்டத்தில் மேலோங்கச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அவ்வாறே இந்த நிதியம் மூலம் மேற்கொள்ளப்படுகின்ற எதிர்பார்க்காத விபத்துக்களுக்கான இழப்பீட்டு பணமாக இருந்தமையால் போதியளவான நிதியொன்றைச் பேணிச் செல்வதற்கான தேவை இருந்ததை அறியத்தருகின்றோம். | எதிர்பார்த்த நோக்கங்களை நிறைவேற்றும் வகையில் நிதியத்தை செயற்திறனாக பயன்படுத்துதல் வேண்டும். |

## 3.4 பெறுகைகள் முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | தனியார் கம்பனியொன்றின் மூலம் அதிகார சபை நடாத்திச் செல்லப்பட்ட கட்டிடத்திற்கு அருகில் மேற்கொள்ளப்பட்ட நிர்மாண செயற்பாடுகளினால் அதிகார சபையின் கட்டிடத்திற்கு பாதிப்பு ஏற்பட்டிருந்ததுடன் பாதுகாப்பற்ற நிலைமை காரணமாக தேசிய கட்டிடங்கள் ஆராய்ச்சி நிறுவனத்தின் பரிந்துரையின் அடிப்படையில் மீளாய்வாண்டில் அந்த இடத்திலிருந்து விலகிச் சென்றிருந்தது. அதன் போது பெறுகை நடைமுறைகள் பின்பற்றப்படாமல் 2021 செப்தெம்பர் 03 ஆந் திகதி முதல் குறுகிய காலத்திற்காக தனியார் கட்டிடமொன்று வாடகைக்கு பெறப்பட்டிருந்தது. | 2021 யூலை 16 ஆந் திகதி அதிகார சபையின் தலைமை அலுவலகக் கட்டிடத்தில் ஏற்பட்ட நில இறக்கத்தின் அடிப்படையில் தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனத்தின் பரிந்துரையின் படி அத்திகதி முதல் அதிகாரசபையின் அத்தியவசிய கடமைகள் மாத்திரம் நாரஹேன்பிட்டயில் அமைந்துள்ள தேசிய இரத்தினக்கல் ஆபரணம் சார்ந்த இராஜாங்க அமைச்சில் மேற்கொள்ளப்பட்டிருந்தது. அந்த கட்டிடத்தில் போதியளவான இடவசதிகள் காணப்படாமையின் அடிப்படையில் காணப்பட்ட கொவிட் 19 தொற்றுநோயின் காரணமாக அதிகார சபையின் உத்தியோகத்தர்கள் சிலர் நோய் நிலைமைக்கு உட்பட்டிருந்தனர். எனினும் அதிகார சபைக்காக ஆரம்பமாக இணங்கப்பட்ட பிரகாரம் றேணுகா பங்குடமை அமைப்பின் மூலம் கட்டிடத்தை வழங்குதல் தவிர்க்கப்பட்டதன் அடிப்படையில் தற்காலிக அலுவலகத்தை நடாத்திச் செல்வதற்காக கட்டிமொன்றை தேட வேண்டி அதிகார சபைக்கு ஏற்பட்டிருந்தது. அதற்காக அதிகார சபை மூலம் 5 இடங்கள் பரீட்சிக்கப்பட்டிருந்ததுடன் அதனிடையே அதிகார சபைக்கு பொருத்தமான கட்டிடம் தற்போது அதிகார சபை தாபிக்கப்பட்டுள்ள இலக்கம் 12 மெக்சன்ஸ் டவர், எல்பிரட் ஹவுஸ் கார்டன், கொழும்பு 03 இல் அமைந்துள்ள கட்டிடமாக | பெறுகை நடைமுறைகள் பின்பற்றப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | இருந்தமை அவதானிக்கப்பட்டது. | |
| (ஆ) | பின்னர் பெறுகை நடைமுறைகள் பின்பற்றி கூறுவிலை கோரப்பட்டிருந்ததுடன் தற்போது தாபிக்கப்பட்டுள்ள கட்டிடத்திற்காக மற்றும் ஏனைய கட்டிடமொன்றிற்காவும் முறையே ரூபா 4,500,000 தொகை, ரூபா 3,000,000 ஆக கூறுவிலைகள் கிடைத்திருந்ததுடன் ஆகக்கூடிய விலையில் சமர்ப்பித்த அதிகார சபை தற்போது தாபிக்கப்பட்டுள்ள கட்டிடம் தாபிக்கப்பட்டு பெறுகை நடைமுறைகள் பின்பற்றப்படடாமல் வாடகைக்கு எடுக்கப்பட்ட போதும், மேவுகையின் படி 2021 ஆகஸ்ட் 31 ஆந் திகதி முதல் 2023 ஆகஸ்ட் 31 ஆந் திகதி வரையான காலப்பகுதி வாடகை உடன்படிக்கையில் கைச்சாத்திடப்பட்டிருந்தது. குறைந்த கேள்வி சமர்ப்பித்த நிறுவனம் தெரிவு செய்யப்படாமையால் அதிகாரசபை வாடகைக்கு எடுத்த 02 வருடங்களுக்காக ரூபா 36,000,000 மேலதிகமக செலுத்த வேண்டியேற்பட்டிருந்தது. | கட்டிடம் வாடகை அடிப்படையில் பெற்றுக் கொள்வதற்காக ரூபா 3,800,000 வீதம் 4 மாத கால மாத்திரம் பணம் வழங்க வேண்டியிருந்ததாக இறுதியாக றேணுகா பங்குடமை அமைப்பினால் அதிகார சபைக்கு அறிவிக்கப்பட்டிருந்தது. எனினும் 4 மாத கால எல்லைக்காக எந்தவொரு கம்பனியோ அல்லது உரிமையாளரோ கட்டிடத்தை வழங்காமையின் அடிப்படையில் 03 மாதங்களுக்கு முன்னர் அறிவித்தல் வழங்கி விலகிச் செல்லக்கூடிய வகையில் 02 வருட கால எல்லைக்காக உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்தது. அதன் பின்னர் 2021 செப்தெம்பர் 02 ஆந் திகதி உடன்படிக்கை கைச்சாத்திட்டதன் பின்னர் தலைமை அலுவலகம் புதிய இடத்தில் தாபிக்கப்பட்டிருந்தது. அதற்கு இணையாக பணிப்பாளர் சபை ஆலோசனையின் பிரகாரம் பெறுகை நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டதுடன் அதற்காக 02 நிறுவனங்களின் கூறுவிலைகள் சமர்ப்பிக்கப்பட்டு அந்த கூறுவிலைகள் முறையே ரூபா 4,500,000 தொகை மற்றும் ரூபா 3,000,000 ஆக இருந்தது. எனினும் ஆகக்குறைந்த விலை சமர்ப்பித்த நிறுவனத்திற்குரிய கட்டிடத்தில் உள்ள தொழில்நுட்ப குறைபாடுகள் மற்றும் அதிகாரசபையின் நோக்கத்திற்கு இணங்காமையின் காரணமாக அதிகார சபைக்காக வாடகை | வெளிப்படையாக பெறுகை நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | அடிப்படையில் பெற்றுக் கொள்வதற்கு பொருத்தமான கட்டிடம் இலக்கம் 12 மெக்ஸன்ஸ் டவர், அல்பிரட் ஹவுஸ் கார்டன், கொழும்பு 03 இல் அமைந்துள்ள கட்டிடம் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு மற்றும் பெறுகை குழுவினால் பரிந்துரை செய்யப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் பணிப்பாளர் சபைக்கு அறிவித்து அங்கீகாரம் பெறப்பட்டு உடன்படிக்கை இரத்துச் செய்யப்படாமல் தற்போது அலுவலக நடவடிக்கைகள் நடாத்திச் செல்லப்படுகின்றது என தயவுடன் அறியத்தருகின்றோம். இந்த புதிய கட்டிடத்திற்காக மேலதிகமாக செலுத்தப்பட்ட பணம் தரைமாடி மற்றும் இடையில் உள்ள மாடியில் விற்பனை கடைகளுக்காக வாடகை அடிப்படையில் பெறப்பட்டமையால் இந்த கிரயத்தை குறைப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளதுடன் தற்போது பெறுகை நடைமுறைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. | |
| (இ) | இந்தக் கட்டிடத்தில் தொலைபேசி மற்றும் உள்ளக தொலைபேசி இணைப்புக்கள், வலையமைப்பு போன்றவற்றை ஏற்படுத்துதல் (Networking), தரைவிரிப்பை அமைத்தல், கட்டமைப்பை பிரித்து அமைத்தல் என்பவற்றுக்காக 2022 ஏப்ரல் 25 ஆந் திகதி கணக்காய்வுத் திகதி வரையில் ரூபா 14,967,592 செலவிடப்பட்டிருந்தது. | கணனி வலையமைப்பாக்கல், தொலைபேசி முறைமை, உள்ளக தொலைபேசி முறைமையை அமைத்தல், அலுவலக துணைப் பாகங்களை போக்குவரத்து செய்தல், இரத்தினக்கல் ஆய்வுகூடம் மற்றும் தங்க அளவினை தீர்மானிக்கும் ஆய்வுகூடங்களில் மேற்கொள்ளப்பட வேண்டிய ஆரம்ப பிரித்தல் மேற்கொள்ளப்படாமல் அலுவலக நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்கு முடியாதிருந்தமையால் மேற்குறிப்பிடப்பட்ட செயற்பாடுகள் | அதிகார சபைக்கு செலவிடுவதற்கு ஏற்பட்ட பணத்தை உரிய தரப்பினரிடமிருந்து விரைவாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | மேற்கொள்ளப்பட்டிருந்தன. அவ்வாறே அதிகார சபையின் கட்டிடம் கீழிறங்கியமையின் காரணமாக செய்வதற்கு ஏற்பட்டவைகளை அறவிடுவதற்காக றேணுகா கம்பனிக்கு எதிராக சிவில் வழக்கொன்றை தொடர்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | |
| (ஈ) | அதிகார சபையை புதிய கட்டிடத்தில் தாபிப்பதற்காக 2022 ஏப்ரல் 22 கணக்காய்வுத் திகதி வரையிலும் ரூபா 53,244,339 தொகை அதிகார சபைக்கு செலவிட வேண்டியேற்பட்டிருந்ததுடன் அதிகார சபை நடாத்திச் செல்லப்பட்ட கட்டிடம் பாதிப்பிற்கு உட்படும் வகையில் நிர்மாண நடவடிக்கைகளை மேற்கொண்ட தனியார் கம்பனியிடமிருந்து அந்த பணம் அறவிடப்பட்டிருக்க வில்லை. | பணிப்பாளர் சபைத் தீர்மானத்தின் பிரகாரம் ''கோல்பேஸ் புறப்பட்டீஸ்'' நிறுவனத்தின் காரணமாக அதிகார சபைக்கு ஏற்பட்ட சகல இழப்புக்கள் மற்றும் நட்டங்களை பூர்த்தி செய்வதற்காக சிவில் வழக்கொன்று தொடர்வதற்கு ஆலோசனை மற்றும் அங்கீகாரம் உரித்தாக இருந்தமையால் அந்த வழக்கினை நடாத்திச் செல்லும் போது சிறந்த முறையில் நடாத்திச் செல்லப்படாமையால் சட்ட ரீதியான தேவையின் அடிப்படையில் ''கோல்பேஸ் புறப்பட்டீஸ்'' நிறுவனத்துடன் இழப்பீட்டை அறவிடுவதற்காக உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருக்க வில்லை. அதிகார சபை வாடகையின் அடிப்படையில் புதிய இடமொன்றை தாபிக்கும் போது இதுவரை அதிகார சபையால் மேற்கொள்ளப்பட்ட சகல செலவினங்களையும் சட்ட ரீதியாக அறவிடுவதற்காக அந்த செலவினம் சட்டப் பிரிவிற்கு அனுப்பப்பட்டுள்ளது. | - மேற்படி - |